# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 67 / 2020**

திரு.M.குருசாமி, **BY RPAD**
தலைவர், அறஙகாவலர் குழு,
ஸ்ரீபச்சியம்மன் கோயில்,
120, மணிமேகலை வீதி,
புதுப்பாளையம்,
கோபிசெட்டிபாளையம் – 638452. . . . . மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு. K.N. கருப்பசாமி)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ&ப/கோபி,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 34, வெஙகட்ராமன் தெரு,
கோபிசெட்டிபாளையம் – 638452.

2. உதவி செயற்பொறியாளர்/ இ&ப/கட்டுமானம்/கோபி,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 34, வெஙகட்ராமன் தெரு,
கோபிசெட்டிபாளையம் – 638452.

3. உதவி மின்பொறியாளர்/ இ&ப/ வடக்கு/கோபி,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
D. 343, ஈரோடு மெயின் ரோடு,
குள்ளம்பாளையம் பிரிவு,
குள்ளம்பாளையம்,
கோபிசெட்டிபாளையம் – 638476. . . . எதிர்மனுதாரர்கள்
(திரு.N.A.சஙகர், செயற்பொறியாளர்/இ&ப/கோபி
திரு.S. ராஜாமணி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப/கட்டுமானம்/கோபி
திரு.A.ரமேஷ்குமார், உதவி மின்பொறியாளர்/ இ&ப/ வடக்கு/கோபி)

**<u>கேட்புரை நாள்: 27–01–2021</u>**

**<u>ஆணை நாள் : 25–03–2021</u>**

11.12.2020 அன்று பெறப்பட்ட திரு.M.குருசாமி, தலைவர், அறஙகாவலர் குழு, ஸ்ரீபச்சியம்மன் கோயில், 120, மணிமேகலை வீதி, புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம் – 638452 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண். 67/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 27.01.2020 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதஙகள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதஙகள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதஙகள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழஙகப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

பெரியார் நகரில் அமைந்துள்ள ஸ்ரீபச்சியம்மன் கோயிலுக்கு வழஙகப்பட்டுள்ள மின் இணைப்பை Tariff V- யிலிருந்து Tariff II C-க்கு மாற்றித் தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 தனியார் நிலத்தில் அமைந்துள்ள திருக்கோயில் அனைத்து சமூகத்தினரும் வழிபடும் பொதுக் கோயில் என்பதால் மின் இணைப்பு எண் 04–314–012–910, Tariff V- யிலிருந்து Tariff II C-க்கு மாற்றித் தருமாறு மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்திற்கு Tariff மாற்றம் செய்ய முடியாது என இளமின் பொறியாளரும் மற்றும் உதவிச் செயற்பொறியாளரும் மறுத்துவிட்டதால் மேல்முறையீட்டாளர் கோபி மின் பகிர்மான வட்டத்தை 29.09.2020 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கோபி மின்பகிர்மான வட்டம் 13.10.2020 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு</u> –

கோபி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 13.10.2020 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் இறுதி தீர்ப்பு</u>*

*மனுதாரர் வீதப்பட்டி எண் IIC-ல் மின் இணைப்பு கோரும் திருக்கோவிலானது, வன்னிய குல சத்திரியர் குல தெய்வமான ஸ்ரீ பச்சியம்மன் திருக்கோவில் என தனிப்பட்ட சமூகத்தினருக்கு மட்டும் வழிபாடு நடத்துவதற்காக உள்ள திருக்கோவிலாகும் என்பது தெளிவாகிறது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வீதப்பட்டிகள் வழிகாட்டுதலின் (Tariff order) படி "அனைத்து மக்களும் வழிபாடு நடத்தக் கூடிய பொது வழிபாட்டு தலஙகளுக்கு மட்டும் TF-IIC-ல் வழஙகப்பட வேண்டும் என உத்தரவு வழஙகப்பட்டுள்ளது". மேலும், தமிழ்நாடு ஒழுஙகுமுறை ஆணையம்/சென்னை உத்தரவு எண். T.01-64 நாள். **05.09.2005**ல், "In respect of places of worship in plantation colonies, the change of tariff from LT-V to LT II-C will be given wherever there are no restrictions for entry to public" என குறிப்பிட்டு உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. ஆகவே, மனுதாரர் TF-C வீதப்பட்டி கோரும் திருக்கோயிலானது ஒரு சமூகத்தினருக்கு மட்டும் உள்ள குலதெய்வ கோவில் என்பதால், தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணைய உத்தரவின் படி TF-IIC–ல் மின் இணைப்பு வழஙக முடியாது என இம்மன்றம் கருதுகிறது. எனவே, மேற்படி மனு மீதான நடவடிக்கை ஏதுமின்றி முடித்து கொள்ளப்படுகிறது. மேற்கண்ட மனுதாரரின் கோரிக்கை ஏற்க இயலாததால் அம்மனுவை இம்மன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

**4.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தஙகளது தரப்பு வாதஙகளை எடுத்துரைப்பதற்கு வசதியாக 27.01.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

**4.2** மேல்முறையீட்டாளர் சார்பாக திரு. K.N. கருப்பசாமி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

**4.3** எதிர்மனுதாரர்கள் திரு.N.A. சஙகர், செயற்பொறியாளர் / இ&ப / கோபி, திரு.S. ராஜாமணி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப/கட்டுமானம்/கோபி மற்றும் திரு.A.ரமேஷ்குமார், உதவி மின்பொறியாளர்/ இ&ப/ வடக்கு/கோபி, கோபி மின்பகிர்மான

வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்பிக்கப்படாத புதிய நிவாரணஙகள் அல்லது பணியாளர் ஒழுஙகு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுஙகுமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதஙகள்:</u>**

5.1 கோபி மின் பகிர்மான வட்டத்தில் கோபி தாலுகா, பொலவக்காளிபாளையம் கிராமம், பெரியார் நரில் பட்டா நிலத்தில் ஸ்ரீ பச்சியம்மன் கோயில் கட்டி Tariff Vபடி மின் இணைப்பு பெற்றுள்ளதாகவும், திருமதி பத்மா மற்றும் திருமதி S.பரமேஸ்வரி ஆகியோரிடமிருந்து நிலத்தானம் பெற்று அறஙகாவலர் குழு அமைத்து இந்தக் கோயிலைக் கட்டி மின் இணைப்பு எண் 04–314–012–910 பெற்றுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மின்வாரிய ஒழுஙகுமுறை ஆணை Tariff Order-ல் ‘This tariff is applicable to actual place of public worship’என்று தான் உள்ளது என்றும், place of public worship என்பதற்கு அரசு நிலம், தனியார் நிலம் என்று எந்த வகைப்பாடும் Tariff உத்தரவில் இல்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 இந்துக் கோவில்கள், ஏதாவது ஒரு சாதியில் உள்ள பிரிவினருக்கு குலதெய்வக்கோவிலாக இருக்கிறது என்றும், அந்தக் குலத்தினர் தஙகளது குல தெய்வக்கோயில் என்பதால் கோயில் கட்டுமானம், சிறப்பு பூஜைகள், விழாக்களில் அதிகமாக நிதி கொடுத்து பஙகு பெறுவார்கள் என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். தஙகளது குலதெய்வக் கோயில் என்பதால் அவர்களது சாதியில் உள்ள மற்ற குலத்தாரையோ, பிற சாதியினரையோ வழிபட வேண்டாமெனத் தடுப்பதில்லை என்றும், தமிழ்நாட்டில் உள்ள இந்துக் கோயில்கள் எல்லாமே யாராவது ஒரு குலத்தினருக்கு குலதெய்வக் கோயிலாகத் தான் இருக்கும் என்றும், குலதெய்வக் கோயிலுக்கு Tariff II C பொருந்தாது என்றால் எந்தக்

கோயிலுக்குமே Tariff II C கொடுக்க முடியாது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.4** இந்த நிலையில் தங்களின் மனுவை நிராகரித்தது தஙகளுக்கு ஏற்கக் கூடியதாக இல்லை என்றும் கோபி மின் பகிர்மான வட்டம் முதலில் இந்து அறநிலையத் துறையிடமிருந்து சான்று பெற்றுத் தருமாறு கேட்டதாகவும் அந்தச் சான்று தேவையில்லை என இயக்குநர்/பகிர்மானம் இட்ட உத்தரவு எண் **678/20** நாள் **14.07.2020** நகலை கொடுத்த பின்னர், தனியார் நிலத்தில் கோயில் உள்ளதால் Tariff change தர முடியாது என்று கோபி மின் பகிர்மான வட்டம் தெரிவித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.5** அனைத்து மக்களும் வழிபாடு நடத்தக் கூடிய பொது வழிபாட்டு தலஙகளுக்கு மட்டும் Tariff II C வழஙகப்பட வேண்டும் என்று உத்தரவு வழஙகப்பட்டுள்ளதாக கோபி மின்குறைதீர்மன்றத்தில் தவறான தகவலைக் கொடுத்துள்ளதாகவும் அப்படியொரு உத்தரவு இல்லை எனவும் Tariff order-ல் places of public worship என்று தான் உள்ளது என்றும் Actual place of All Community public worship" என்று இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.6** மின்குறைதீர்மன்றத்தில் மின்வாரிய ஒழுஙகுமுறை ஆணையத் தீர்ப்பு T.01-64 நாள் **05.06.2005–**ல் தெரிவிக்கப்பட்டுள்ள தீர்ப்பு தஙகளுக்கு சாதகமாகத்தான் உள்ளது எனவும், அதாவது United Nilgiris Tea Estate என்கிற தனியார் நிலத்தில் உள்ள காலனியில் அமைந்துள்ள கோயிலுக்கு அனைத்து பொதுமக்களும் நுழைய தடையில்லை என்றால் Tariff V-லிருந்து Tariff 2C-க்கு மாற்றிக் கொடுக்கலாம் என்று உள்ளதாகவும், அதன்படி தஙகளது கோயில் தனியார் நிலத்தில் அமைந்திருந்தாலும் தாஙகள் யாரையும் வழிபட தடுக்கவில்லை எனவும், எனவே இந்த தீர்ப்பின்படி தஙகளது கோயிலுக்கும் Tariff 2C–க்கு மாற்றிக் கொடுக்க வேண்டும் என்றும், தஙகளின் கோவிலில் பெரியார் நகரில் உள்ள தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் உட்பட மற்ற சாதிகாரர்கள் அனைவரும் வழிபடுவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேலும் இது அனைத்து சமூகத்தினரும் வழிபடும் கோயில் என்பதற்கு பொலவக்காளிபாளையம் கிராமம் VAO-விடம் சான்று பெற்று மேல்முறையீட்டாளர் இணைத்துள்ளார்.

**5.7** அரசு புறம்போக்கு நிலஙகளில் கோயில்கள் கட்டக்கூடாது என்று தடை உத்தரவு உள்ளதால் தாஙகள் நிலத்தானம் பெற்று பட்டா நிலத்தில் அறக்கட்டளை அமைத்து பொதுக்

கோயில் கட்டியுள்ளதாகவும் கோயில் தனியார் நிர்வாகத்தில் இல்லாமல் அறங்காவலர் குழு மூலம் நிர்வாகம் செயல்படுவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். எனவே, தங்களின் கோயிலுக்கு மின் கட்டணப்பட்டியல் Tariff IIC-க்கு மாற்றம் செய்து தர வேண்டி கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 எதிர்மனுதாரரின் வாதஙகள்:

**6.1** கோபி கோட்டம், கட்டுமானம்/கோபி உபகோட்டம், வடக்கு/கோபி பிரிவு அலுவலகம், பொலவக்காளிபாளையம் கிராமம், புல எண். **369/1, 2**–ல் உள்ள பூமியானது திருமதி. பத்மா மற்றும் திருமதி. பரமேஸ்வரி ஆகியோருக்கு கூட்டாகப் பாத்தியப்பட்ட பூமி என்பதால், மேற்படி உரிமையாளர்களிடம் படிவம் **5**–ல் ஒப்புதல் கடிதமும், மேற்படி கோயில் வன்னியர்குல சத்திரியர் குலதெய்வமான பச்சியம்மன் கோயில் என தெரிவித்து வன்னியர்குல சத்திரியர் குலத்தை சேர்ந்த துணைத்தலைவர், செயலாளர், துணை செயலாளர், பொருளாளர் மற்றும் தர்மகர்த்தா ஆகியோர் தமது குலதெய்வ கோயிலுக்கு "தலைவர்" என்ற பெயரில் மின் இணைப்பு பெறலாம் எனவும், அதற்காக தற்போதைய தலைவர் திரு.எம்.குருசாமி அவர்களுக்கு அதிகாரம் அளித்து தீர்மானம் நிறைவேற்றி வழஙகப்பட்ட ஆவணஙகளோடு விண்ணப்பம் அளித்ததின் அடிப்படையில், மின்நீட்டிப்புப் பணிகள் செய்து முடித்து கடந்த **22.05.2019** அன்று மேற்படி திருக்கோயிலுக்கு விண்ணப்பதாரரான தலைவர், ஸ்ரீபச்சியம்மன் திருக்கோயில் அவர்கள் பெயரில் மின் இணைப்பு எண் **314–012–910** (மின் பளு **1986** வாட்ஸ்) வீதப்பட்டி **5**–ல் மின் இணைப்பு வழஙகப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.2** இத்திருக்கோயிலானது வன்னியர்குல சத்திரியர் குலதெய்வ கோயில் ஒரு சமூகத்திற்கு மட்டும் பாத்தியப்பட்டதென ஆவணஙகளின் அடிப்படையில் தெரிய வந்ததின் பேரிலும், மேற்படி தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம் அளித்துள்ள மி.க.ம.எண்.**1/2017** நாள் **11.08.2017**ன்படி உள்ள கட்டண விகித உத்திரவுக்கிணஙக, TF V-ல் வழஙகப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.3** மேலும், இயக்குநர்/பகிர்மானம் அவர்களின் உத்தரவு Dir/Dt/CFC/Reg.Cell/SE/FC/ F.TF/D.678/20 dt. 14.07.2020-ல் பொது வழிபாட்டு தலஙகளுக்கு Tariff order-ஐ பின்பற்ற அறிவுறுத்தி கூறப்பட்ட அறிவுரையே ஆகும். தனியார் நிலத்தில் அமையப் பெற்ற கோயில்களுக்கான உத்திரவாக கருத இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.4** மின் இணைப்பு பெறும்போது தலைவர், அருள்மிகு ஸ்ரீபச்சியம்மன் திருக்கோயில் என்ற பெயரில் தனியார் பட்டா நிலம் என்று அதற்குரிய ஆவணங்களான பத்திரத்தை உரிமை சான்றாக கொடுத்ததின் அடிப்படையிலேயே வீதப்பட்டி V-ல் குலதெய்வ கோயிலான அருள்மிகு ஸ்ரீபச்சியம்மன் திருக்கோயிலுக்கு மின் இணைப்பு வழஙகப்பட்டது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :</u>

7.1. மேல்முறையீட்டாளர் தனது மனுவில் ஸ்ரீபச்சியம்மன் கோவிலுக்கான மின் இணைப்பு (மின் இணைப்பு எண். 04-314-012-910) அதன் தலைவர், அறங்காவலர் பெயரில் பெறப்பட்டுள்ளதாகவும், இக்கோவில் தனியார் நிலத்தில் அமைந்து அனைத்து சமூகத்தினரும் வழிபடும் பொதுக் கோவில் எனவும் தெரிவித்துள்ளார். இக்கோவில் தங்களது குல தெய்வக்கோவல் எனவும், அரசுப் புறம்போக்கு நிலங்களில் கோயில்கள் கட்டக்கூடாது என்று தடை உத்தரவு உள்ளதால் நாங்கள் நிலத்தானம் பெற்று பட்டா நிலத்தில் கட்டியுள்ள இக்கோவிலுக்கு வீதப்பட்டி V-லிருந்து வீதப்பட்டி II C–ற்கு மாற்றம் செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

7.2. எதிர்மனுதாரர் (தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்), மேற்கண்ட மனுவில் பரிசீலனையில் உள்ள திருக்கோவில் திருமதி.பத்மா மற்றும் திருமதி. பரமேஸ்வரி ஆகியோருக்கு பாத்தியப்பட்ட பூமி எனவும், அவர்களது ஒப்புதல் கடிதத்தின் அடிப்படையில் வன்னிய குல சத்திரியர் குலதெய்வமான ஸ்ரீபச்சியம்மன் திருக்கோவில் உள்ளதன் அடிப்படையில் அதற்கு தாழ்வழுத்த வீதப்பட்டி – V வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் இக்கோவில் ஒரு சமூகத்திற்கு பாத்தியப்பட்ட குலதெய்வ கோவில் என ஆவணங்களின் அடிப்படையில் தெரியவந்ததின் பேரில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அளித்துள்ள மி.க.ம.எண்.1 / 2017 நாள் 11-08-2017 ன் படி உள்ள கட்டண உத்திரவிற்கிணங்க மேற்கண்ட வீதப்பட்டி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

7.3. கோபி மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் தனது தீர்ப்பில் மேற்குறிப்பிட்ட ஸ்ரீபச்சியம்மன் திருக்கோவில் தனிப்பட்ட சமூகத்தினருக்கு மட்டும் வழிபாடு நடத்துவதற்காக உள்ள திருக்கோவில் எனவும் அது தமிழ்நாடு மின்சார

ஒழுங்குமுறை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி (Tariff Order) அனைத்து மக்களும் வழிபடும் தலங்களுக்கு மட்டுமே வீதப்பட்டி – II C வழங்கப்பட வேண்டும் என கூறியுள்ளது. மேலும் TNERC T.O.1-64 நாள்.05-05-2005ல், "In respect of places of worship in plantation colonies, the change of tariff from LT-V to LT II-C will be given wherever there are no restrictions for entry to public" மேற்கோள்காட்டி, ஒரு சமூகத்தினருக்கு மட்டும் உள்ள குலதெய்வ கோவில் என்பதால் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய உத்தரவின்படி வீதப்பட்டி II-C வழங்க முடியாது என தீர்ப்பளித்துள்ளது.

7.4 குறைதீர் மன்ற ஆணையில் ஒழுஙகுமுறை ஆணைய உத்தரவின்படி மேல்முறையிட்டாளருக்கு II-C வழஙக இயலாது என்று தீர்ப்பளித்துள்ளதால் நான் மேற்கண்ட ஆணைகளை ஆராய விரும்புகிறேன். ஆணைகளின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" <u>1) TNERC Tariff Order No.1 of 2017, dated 11.08.2017</u>*

*6.2.8 Low Tension Tariff II-C:*

*Table----*

*6.2.8.1 This tariff is applicable to actual places of public worship including Trichy Rock fort temple, its environs and for the road and path ways leading to the temple.*

*6.2.8.2 The existing concessions to the actual places of worship as already notified by GoTN having annual income less than Rs. 1000 shall be continued under the same terms and conditions, until further Order of the Commission.*

*<u>2) TNERC Order No.T.O. 1-64, dated 05.09.2005</u>*

*"5. Accordingly the Commission order the following change of tariff to the service connection of United Nilgiris Tea Estate Co. Ltd….*

*6. ….. Similarly, in respect of places of worship in plantation colonies, the change of tariff from LT V to LT IIC will be given wherever there are no restrictions for entry to public."*

மேற்கண் மின்கட்டண ஆணையின் பத்தி **6.2.8.1** உள்ள பொருள் விளக்கத்தின்படி வீதப்பட்டி II-C என்ற வகைப்பாடு அனைத்து பொது வழிபாட்டிடஙகளுக்கும் (applicable to

actual places of public worship) பொருந்தக்கூடியதாகும். மேலும், 05.09.2005-நாளிட்ட ஆணையத்தின் T.O.1-64 ஆணையிலும் எந்தவொரு கட்டுப்பாடுகளுமின்றி பொதுமக்கள் வருகின்ற வழிபாட்டு தலஙகளுக்கு தாழ்வழுத்த மின்கட்டணம் II-C யில் வகைப்படுத்தலாம் என்றே கொடுக்கப்பட்டுள்ளது.

7.5. மேலும் மேல் முறையீட்டாளர் பொலவக்காளிபாளைய கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்ற சான்றில் திருமதி.பரமேஸ்வரி என்பவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் அருள்மிகு பச்சியம்மன் திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது எனவும், தற்போது வரையிலும் அக்கோவிலில் சுற்றுவட்டாரத்தில் உள்ள அனைத்து தரப்பு பொதுமக்களும் வழிபட்டு வருகின்றனர் என்பது களவிசாரணையிலும், பொதுமக்கள் விசாரணையிலும் தெரியவருகிறது எனவும் சான்றளித்துள்ளார். எனவே எதிர்மனுதாரர் கூறியவாறு இக்கோவில் தனிப்பட்ட சமூகத்தினர் மட்டும் வழிபடும் கோவில் என்ற கூற்று முரணானதாக கருதுகிறேன்.

7.6. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையிடத்து உத்தரவு நாள் 14-07-2020-ல் அதன் அனைத்து மேற்பார்வை பொறியாளர்களுக்கும் - “3.0 There is no need to insist on certification from ownership / supervision of HR & CE department for classification of actual public places of worship under LT Tariff II C as per the prevailing Tariff order” என தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும் கோவில் அமைந்துள்ள நிலத்தின் உரிமையின் அடிப்படையில் வீதப்பட்டி II-C மறுக்கப்படக்கூடாது என தெரிவித்துள்ளதை எதிர்மனுதாரர்கள் கவனத்தில் கொள்ளவில்லை என கருதுகிறேன்.

7.7 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி, மின்னிணைப்பு எண்.04–314–012–910 அமைந்துள்ள ஸ்ரீபச்சியம்மன் கோவில் அனைத்து தரப்பு மக்களும் வழிபட ஏதுவான பொது வழிபாட்டு தலம் என சான்றுகளின் மூலம் அறியப்படுகிறது. மேலும், நடைமுறையிலுள்ள வீதப்பட்டி ஆணையின்படி, வழிபாட்டு தலஙகளின் மீதான நில உரிமை அல்லது அதன் வருமானம் அல்லது சமுதாய அடிப்படையிலான எந்தவொரு நிபந்தனை / நிர்பந்தமுமின்றி பொது வழிபாட்டிற்கான இடஙகளை மின் கட்டண வீதப்பட்டி II-C யில் வகைப்படுத்த வழிவகை உள்ளதாக கருதுகிறேன். எனவே, இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மின்னிணைப்பு

எண்.04–314–012–910–ற்கு வீதப்பட்டி V–லிருந்து வீதப்பட்டி II-C-ற்கு மின் கட்டண வீதத்தை மாற்றம் செய்யலாம் என தீர்வு செய்யப்படுகிறது.

## 8.0 பகுப்பாய்வு:

பொது வழிபாட்டுத்தலம் என்பதற்கு புது விளக்கம் தர எதிர்மனுதாரர்கள் முயற்சித்துள்ளார்கள். எல்லா மதஙகளிலும் பல பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு பிரிவினரும் அவரவர்களின் வழிபாட்டு தத்துவம் மற்றும் கோட்பாடுகளின்படி தனித்தனியே வழிபாட்டுத் தலஙகள் அமைத்து வழிபடுகின்றனர். ஒரே மதத்தை சேர்ந்த ஒரு சில பிரிவினர் மற்ற பிரிவினரின் வழிபாட்டுத் தலஙகளுக்கு செல்ல விரும்புவதில்லை. அவ்வாறு வழிபட வருபவர்களை யாரும் தடை செய்வதுமில்லை. இந்நிலையில் எந்தவொரு பிரிவினருடைய வழிபாட்டுத்தலமும் பொது வழிபாட்டுத்தலம் இல்லையென வரையறுத்து கூறமுடியாது. மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு நபர்கள் வந்து வழிபாடு செய்யக்கூடிய வழிபாட்டுத்தலஙகள் பொது வழிபாட்டுத்தலஙகளாகவே கருதப்படவேண்டும்.

இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் தஙகள் வழிபாட்டுத் தலத்திற்கு அவர்களுடைய சாதியில் உள்ள மற்ற குலத்தவர்களையோ, பிற சாதியினரையோ வழிபாட்டுக்கு வரும்போது தடுப்பதில்லையென தெரிவித்துள்ளார்கள். மேலும் அனைத்து தரப்பு மக்களும் மேற்படி கோயில் வழிபாட்டுக்கு வருகின்றனர் என கிராம நிர்வாக அதிகாரி சான்றளித்துள்ளார். அரசு பணியில் உள்ளோர் சமுகத்திற்குள் பாகுபாடு பார்த்து, அதன் அடிப்படையில் வழிபாட்டுத் தலத்திற்கு வீதப்பட்டி நிர்ணயம் செய்வது தவறான முன்னுதாரணமாகும்.

## 9.0 முடிவுரை:

9.1 பத்தி 7–ல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில், மின்னிணைப்பு எண் 04–314–012–910 அமைந்துள்ள ஸ்ரீபச்சியம்மன் கோவில் அனைத்து தரப்பு மக்களும் வழிபட ஏதுவான பொது வழிபாட்டுத்தலம் என சான்றுகளின் மூலம் அறியப்படுகிறது. மேலும், நடைமுறையிலுள்ள வீதப்பட்டி ஆணையின்படி, வழிபாட்டு தலஙகளின் மீதான நில உரிமை அல்லது அதன் வருமானம் அல்லது சமுதாய அடிப்படையிலான எந்தவொரு நிபந்தணை / நிர்பந்தமுமின்றி பொது வழிபாட்டிற்கான இடஙகளை மின் கட்டண வீதப்பட்டி II-C யில் வகைப்படுத்த

வழிவகை உள்ளதாக கருதுகிறேன். எனவே, இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மின்னிணைப்பு எண்.04–314–012–910–ற்கு வீதப்பட்டி V–லிருந்து வீதப்பட்டி II-C-ற்கு மின் கட்டண வீதத்தை மாற்றம் செய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவு இடப்படுகிறது.

9.2 மேற்கண்ட தீர்வை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது. மேலும், மேற்கண்ட ஆணையை நிறைவேற்றியது சம்பந்தமான அறிக்கையை 45 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

9.3 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 67/2020 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு.M.குருசாமி,
தலைவர், அறஙகாவலர் குழு,
ஸ்ரீபச்சியம்மன் கோயில்,
120, மணிமேகலை வீதி,
புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம் – 638452.

2. செயற்பொறியாளர்/இ&ப/கோபி,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 34, வெஙகட்ராமன் தெரு,
கோபிசெட்டிபாளையம் – 638452.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&ப/கட்டுமானம்/கோபி,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 34, வெஙகட்ராமன் தெரு, கோபிசெட்டிபாளையம் – 638452.

4. உதவி மின்பொறியாளர்/ இ&ப/ வடக்கு/கோபி,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
D. 343, ஈரோடு மெயின் ரோடு,
குள்ளம்பாளையம் பிரிவு,
குள்ளம்பாளையம், கோபிசெட்டிபாளையம் – 638476.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
கோபி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கட்சேரி தெரு, கோபிசெட்டிப்பாளையம் – 638 452.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.